**அக்டோபர் – 22**

# TNPSC துளிகள்

- மெரோபிடே குடும்பம் மற்றும் கோராசிஃபார்ம்ஸ் வரிசையைச் சேர்ந்த இளம் ஐரோப்பிய தேனீ உண்ணும் பறவை (மெராப்ஸ் ஏபியாஸ்டர்) தமிழ்நாட்டின் சென்னையில் முதன்முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 17 முதல் 19 ஆம் தேதி வரை பிரான்சில் வாழ்க்கைச் செலவு மற்றும் எரிபொருள் விலை உயர்வுக்கு எதிராக வன்முறைப் போராட்டங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றன. இதில் 2,513 பேர் காவலில் வைக்கப்பட்டதுடன், பாரிஸ் மற்றும் பிற நகரங்களின் சில பகுதிகளில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.
  - இத்தாலியின் மிலன் நகரிலும் கலவரங்கள் மற்றும் கொள்ளைச் சம்பவங்கள் நடைபெற்றதுடன் அங்கு குறைந்தது 270 ஆர்ப்பாட்டக்காரர்கள் தடுத்து நிறுத்தப்பட்டனர்.
- ஆதித்யா-L1 விண்கலமானது அதன் புலப்படும் உமிழ்வு வரி ஒளிவட்ட வரைவி (VELC) கருவியைப் பயன்படுத்தி சூரிய கரோனாவின் டாப்ளர் திசைவேகப் படங்களை உருவாக்கியுள்ளதுடன் இது சூரிய பிளாஸ்மா இயக்கம் மற்றும் ஒளிவட்டப் பெரு வெடிப்புகளின் (CME) திசையை ஆய்வு செய்ய அறிவியலாளர்களுக்கு உதவுகிறது.
  - VELC தரவைச் செயலாக்குவதற்கான மென்பொருளை இந்திய வான் இயற்பியல் நிறுவனம் (IIA) உருவாக்கியுள்ளது; CMEகள் என்பவை சூரியனிலிருந்து வெளியேற்றப்படும் வெப்பமான பிளாஸ்மாவின் பெரிய மேகங்களாகும், இவை பூமிக்கு அருகிலுள்ள விண்வெளியில் இடையூறுகளை ஏற்படுத்தும்.
- ககன்யான் திட்டத்தின் போது பூமிக்குள் மீண்டும் நுழைவதற்கு முன்பு இரண்டு தொகுதிகளும் பாதுகாப்பாகப் பிரிவதைச் சரிபார்க்கும் வகையில், கேரளாவின் திருவனந்தபுரத்தில் உள்ள விக்ரம் சாராபாய் விண்வெளி மையத்தில் (VSSC) இஸ்ரோ 'குழு தொகுதி' மற்றும் 'சேவை தொகுதி' (CM-SM) பிரிப்பு சோதனைகளை நிறைவு செய்துள்ளது.
  - ககன்யான் என்பது இந்தியாவின் முதல் மனித விண்வெளிப் பயணத் திட்டமாகும். இந்திய விண்வெளி வீரர்களை பூமியின் தாழ்வான சுற்றுப்பாதைக்கு அனுப்பி அவர்களைப் பாதுகாப்பாக பூமிக்குக் கொண்டு வருவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அதிர்ச்சிகரமான காயங்கள், அவற்றைத் தடுக்கும் முறைகள் மற்றும் சரியான நேரத்தில் மருத்துவ சிகிச்சை அளிப்பதன் முக்கியத்துவம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் அக்டோபர் 17 அன்று உலகப் பேரதிர்ச்சி/காயங்கள் விழிப்புணர்வு தினம் கடைபிடிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான கருத்துரு Building a Safer Future with Trauma Care என்பதாகும்.

# தமிழ்நாட்டுச் செய்திகள்

## வெற்றி 150 திட்டம் - தமிழ்நாடு

- பாதிக்கப்படக்கூடிய ஊரகக் குடும்பங்களுக்கு கூடுதல் வேலைவாய்ப்பை வழங்குவதற்காக 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று தமிழ்நாடு அரசு வெற்றி 150 திட்டத்திற்கு ஒப்புதல் அளித்தது.
- விக்சித் பாரத்-கியாரண்டி ஃபார் ரோஸ்கர் அண்ட் அஜீவிகா திட்டம் (கிராமின்) (VB-G

RAM G) எனும் திட்டத்தின் கீழ் தகுதியான குடும்பங்களுக்கு ஒரு நிதியாண்டில் உத்திரவாத வேலைவாய்ப்பை 125 நாட்களில் இருந்து 150 நாட்களாக இத்திட்டம் நீட்டிக்கிறது.

- இத்திட்டத்தை செயல்படுத்த 2026-27 ஆம் ஆண்டிற்கு மாநில அரசு ₹100 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.
- தகுதியான குடும்பங்களில் பெண்கள் தலைமையிலான மற்றும் ஒற்றைப் பெண் உள்ள குடும்பங்கள், மாற்றுத்திறனாளிகளைக் கொண்ட குடும்பங்கள், பட்டியலிடப்பட்ட சாதியினர் (SC) மற்றும் பட்டியலிடப்பட்ட பழங்குடியினர் (ST) குடும்பங்கள் மற்றும் தகுதியான வனவாழ் குடும்பங்கள் ஆகியவை அடங்கும்.
- VB-G RAM G திட்டத்தின் கீழ் ஆரம்ப 125 நாட்கள் வேலைவாய்ப்பை முடித்த பிறகு கூடுதல் 25 நாட்கள் வழங்கப்படுகின்றன.
- மத்திய மற்றும் மாநில அரசுகள் VB-G RAM G நிதியுதவியை 60:40 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றன.

**TN govt sanctions Rs 100 Cr for Vetri 150 scheme, extends rural job guarantee to 150 days for vulnerable households**

The Tamil Nadu government has sanctioned Rs 100 crore for its Vetri 150 scheme, providing an additional 25 days of wage employment to specified vulnerable rural households that complete the 125-day entitlement under the Centre's VB-G RAM G scheme. The Rs 100-crore allocation has been made from the Revised Budget Estimate for 2026-27.

# தேசியச் செய்திகள்

## LAHDC திருத்த விதிமுறைகள் 2026

- லடாக்கின் அனைத்து எட்டு மாவட்டங்களிலும் மலை சபைக்கான தேர்தல்களுக்கு வழிவகுக்கும் வகையில் லடாக் தன்னாட்சி மலை மேம்பாட்டுச் சபைகள் (LAHDC) (திருத்தம்) ஒழுங்குமுறை 2026-ஐ குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு பிரகடனப் படுத்தினார்.
- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 14 அன்று இந்தத் திருத்தங்களுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது.
- ஒவ்வொரு சபையிலும் உள்ள தொகுதிகளின் எண்ணிக்கையை 26 லிருந்து குறைந்தபட்சம் 7 ஆகவும் அதிகபட்சம் 24 ஆகவும் இவ்விதிமுறை மாற்றுகிறது.
- உள்ளாட்சி நிர்வாகத்தில் பங்கேற்பை மேம்படுத்துவதற்காக பெண்கள் மற்றும் பிரதிநிதித்துவமில்லாத சமூகங்களில் இருந்து நான்கு உறுப்பினர்களை நியமனம் செய்ய இது வகை செய்கிறது.
- லடாக் கடந்த 2019 ஆம் ஆண்டில் முந்தைய ஜம்மு காஷ்மீர் மாநிலத்திலிருந்து பிரிக்கப்பட்ட பிறகு ஓர் ஒன்றியப் பிரதேசமாக மாறியது. இதற்கு முன்பு லே மற்றும் கார்கில் ஆகிய இரண்டு இடங்களில் மலை சபைகளைக் கொண்டிருந்தது.

- புதிதாக உருவாக்கப்பட்ட சங்கு (Sankoo) மாவட்டமும் அனைத்து எட்டு மாவட்டங்களிலும் மலை சபைகளை நிறுவும் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.




## பசுமை தீபாவளி பிரச்சாரம் 2026




- WWF-இந்தியா EIACP திட்ட மையத்தின் நாடு தழுவிய பசுமை தீபாவளி பிரச்சாரம் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று தொடங்கி 2026 ஆம் ஆண்டு நவம்பர் 8 வரை நடைபெறுகிறது.
- மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகத்தின் (MoEFCC) ஆதரவுடன் நடைபெறும் இப்பிரச்சாரம், குறைந்த அளவிலான மாசு மற்றும் கழிவுகளுடன் தீபாவளியைக் கொண்டாட மக்களை ஊக்குவிக்கிறது.
- தேசிய தூய்மையான காற்று திட்டத்தின் (NCAP) கீழ் உள்ள 130 நகரங்களில் இது குறிப்பாக கவனம் செலுத்துகிறது.
- பட்டாசுகள் மற்றும் ஒருமுறை மட்டுமே பயன்படுத்தும் நெகிழிகளைத் தவிர்ப்பது, பாரம்பரிய விளக்குகள் (தியாக்கள்) மற்றும் ஆற்றல் திறன் கொண்ட விளக்குகளைப்

பயன்படுத்துவது, கழிவுகளைத் தரம் பிரிப்பது மற்றும் உள்ளூர் தயாரிப்புகளைத் தேர்ந்தெடுப்பது ஆகியவற்றை இப்பிரச்சாரம் ஊக்குவிக்கிறது.

- சுற்றுச்சூழலுக்கு உகந்த வாழ்க்கை முறைகளை ஊக்குவிக்கும் மிஷன் லைஃப் (Mission LiFE - சுற்றுச்சூழலுக்கான வாழ்க்கைமுறை) திட்டத்துடன் இது ஒத்துப்போகிறது.

# சர்வதேசச் செய்திகள்

## ஏற்றுமதி வளர்ச்சி மற்றும் ஆசியான் (ASEAN)




- 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் ஆகஸ்ட் மாதம் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவின் ஏற்றுமதியில் வேகமாக வளரும் பிராந்திய இடமாக தென்கிழக்கு ஆசிய நாடுகளின் சங்கம் (ASEAN) உருவெடுத்துள்ளது. இதில் பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி காரணமாக 56% அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
- ஆசியான் நாடுகளுக்கான இந்தியாவின் பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 2.4 மடங்கு அதிகரித்து 6.1 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளதுடன் இந்த ஏற்றுமதியில் சிங்கப்பூர் மட்டும் நான்கில் மூன்று பங்கைக் கொண்டுள்ளது.
- ஆசியான் நாடுகளுக்கான கணினி வன்பொருள் ஏற்றுமதி 20 மடங்கு அதிகரித்து 1.4 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும், மின் இயந்திர ஏற்றுமதி 82% அதிகரித்து 1.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாகவும் உயர்ந்துள்ளது.
- ஐரோப்பிய ஒன்றியத்திற்கான (EU) இந்தியாவின் ஏற்றுமதி மிகக் குறைந்த வேகத்தில் வளர்ச்சி அடைந்துள்ளது. பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 21% சரிந்து 4.6 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உள்ளது.
- ஸ்பெயினுக்கான இந்தியாவின் ஏற்றுமதி 54% அதிகரித்து 3.5 பில்லியன் அமெரிக்க டாலர்களாக உயர்ந்துள்ளது. இத்தாலிக்கான பெட்ரோலியப் பொருட்களின் ஏற்றுமதி 4 மில்லியன் அமெரிக்க டாலர்களில் இருந்து 659 மில்லியன் அமெரிக்க டாலர்களாக அதிகரித்துள்ளது.
- தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ASEAN) 1967 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8 அன்று தாய்லாந்தின் பாங்காக்கில் 'பாங்காக் பிரகடனத்தின்' மூலம் நிறுவப்பட்டது.
- புருனே, கம்போடியா, இந்தோனேஷியா, லாவோஸ், மலேசியா, மியான்மர்,

பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து, தைமூர்-லெஸ்டே மற்றும் வியட்நாம் ஆகிய 11 உறுப்பு நாடுகளை ஆசியான் கொண்டுள்ளது மற்றும் ஆசியானில் இந்தியா உறுப்பு நாடாக இல்லை.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## மகாராஷ்டிராவில் புலிகள் இடம் பெயர்வு

- மகாராஷ்டிராவின் பீட் மாவட்டத்தில் உள்ள பிரம்மகான் வனப்பகுதியில் சுமார் 100 ஆண்டுகளுக்குப் பிறகு 200 கிலோவுக்கு மேல் எடையுள்ள நான்கு வயது ஆண் புலி ஒன்று படக்கருவி மூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.
- இப்புலி யவத்மால் மாவட்டத்தில் உள்ள திபேஷ்வர் வனவிலங்கு சரணாலயத்திலிருந்து உருவானது மற்றும் 2023 ஆம் ஆண்டில் அங்கிருந்து வெளியேறியது.
- பீட் மாவட்டத்தை அடைவதற்கு முன்பு சந்திரபூர், தாராஷிவ், லத்தூர் மற்றும் அகில்யாநகர் வழியாக இது பயணித்துள்ளது.
- பாந்தெரா டைகிரிஸ் (Panthera tigris) என்று அறிவியல் பூர்வமாக அழைக்கப்படும் புலியானது, 1972 ஆம் ஆண்டின் வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் அட்டவணை I இன் கீழ் பாதுகாக்கப்படுகிறது.
- புலிகளைப் பாதுகாக்கவும் அவற்றின் வாழ்விடங்களை நிர்வகிக்கவும் இந்தியாவில் 1973 ஆம் ஆண்டில் புலிகள் பாதுகாப்புத் திட்டம் தொடங்கப்பட்டது.




## இந்தியாவில் IUCN செந்நிறப் பட்டியல் மதிப்பீடு

- IUCN கட்டமைப்பின் கீழ், இந்தியாவில் வசிக்கும் மற்றும் வலசை போகும் பறவைகள் உட்பட 1,211 பறவை இனங்களை இந்தியா மதிப்பீடு செய்யத் தொடங்கியுள்ளது.
- இந்திய விலங்கியல் ஆய்வு மையம் (ZSI), IUCN SSC சென்டர் ஃபார் ஸ்பீசிஸ் சர்வைவல் இந்தியா-வைல்டு லைப் டிரஸ்ட் ஆஃப் இந்தியா மற்றும் ஸ்டேட் ஆஃப் இந்தியாஸ் பேர்ட்ஸ் (State of India's Birds) முன்னெடுப்பு ஆகியவற்றால் இந்த மதிப்பீடு மேற்கொள்ளப்படுகிறது.
- 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 19 ஆம் தேதிக்குள் 107 சிற்றினங்களின் ஆரம்ப மதிப்பீடுகள் முடிக்கப்பட்டுள்ளன; அனைத்து இனங்கள் மீதான பணிகள் 2026 ஆம் ஆண்டின் இறுதிக்குள் முடிவடையும் என்றும், இறுதி மதிப்பீடுகள் 2027 ஆம் ஆண்டின் இறுதிக்குள் எதிர்பார்க்கப்படுகின்றன.

- ஆரம்ப மதிப்பீடுகளில் கானமயில் (Great Indian Bustard) 'மிக அருகி வரும் இனம்' (Critically Endangered) என்றும், சாரஸ் கொக்கு (Sarus Crane) எளிதில் பாதிக்கப்படக்கூடிய இனம்' (Vulnerable) என்றும், மார்பிள்டு/பளிங்கு வாத்து (Marbled Duck) 'அருகி வரும் இனம்' (Endangered) என்றும் முன்மொழியப்பட்டுள்ளன. மேலும் இந்தப் பிரிவுகள் இறுதியானவை அல்ல.
- IUCN செந்நிறப் பட்டியல் 1964 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது.
- இந்தியாவின் தேசிய செந்நிறப் பட்டியல் வழிகாட்டி வரைபடம் மற்றும் தொலைநோக்கு 2025-2030 (National Red List Roadmap and Vision 2025–2030) திட்டமானது 2030 ஆம் ஆண்டிற்குள் 11,000 க்கும் மேற்பட்ட தாவரங்கள், விலங்குகள் மற்றும் பூஞ்சை இனங்களை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.




## அரிய புள்ளி வயிற்றுக் கழுகு ஆந்தை – கோழிக்கோடு




- கேரளாவின் கோழிக்கோடு மாவட்டத்தில் உள்ள ஜானகிக்காடு வனப்பகுதியில் புள்ளி-வயிற்றுக் கழுகு ஆந்தை (புபோ நிபாலென்சிஸ் / கேதுபா நிபலென்சிஸ்) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- கோழிக்கோடு மாவட்டத்தில் இந்த இனம் பதிவு செய்யப்படுவது இதுவே முதல் முறையாகும்.
- இந்த ஆந்தை ஸ்ட்ரிஜிஃபார்ம்ஸ் (Strigiformes) வரிசை மற்றும் ஸ்ட்ரிஜிடே (Strigidae)

குடும்பத்தைச் சேர்ந்ததாகும்.

- இது இந்தியாவில் காணப்படும் இரண்டாவது பெரிய ஆந்தை இனமாகும்.
- குட்டியாடி ஆற்றங்கரையில் சுமார் 325 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள ஜானகிக்காடு வனப்பகுதியில் 160 க்கும் மேற்பட்ட பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## தென் இந்தியாவில் மூன்று புதிய பூரான் இனங்கள்

- தென் இந்தியாவில் ரைசிடா குவாட்ரிஸ்பினோசா (Rhysida quadrispinosa), ரைசிடா கூர்கென்சிஸ் (Rhysida coorgensis) மற்றும் ரைசிடா நெய்யரென்சிஸ் (Rhysida neyyarensis) ஆகிய மூன்று புதிய பூரான் இனங்களை அறிவியலாளர்கள் விவரித்துள்ளனர்.
- கர்நாடகாவில் உள்ள கூர்க்கின் நினைவாக ரைசிடா கூர்கென்சிஸ் என்றும், கேரளாவில் உள்ள நெய்யாறு வனவிலங்கு சரணாலயத்தின் நினைவாக ரைசிடா நெய்யரென்சிஸ் என்றும் பெயரிடப்பட்டுள்ளது.
- இந்த மூன்று புதிய இனங்கள் மூலம், இந்தியாவில் அறியப்பட்ட மொத்த ரைசிடா (Rhysida) இனங்களின் எண்ணிக்கை 23 ஆக உயர்ந்துள்ளது.
- பூரான்கள் கிலோபோடா (Chilopoda) வகுப்பைச் சேர்ந்தவை.
- பூரான்கள் இரையைப் பிடிக்கவும் அடக்கவும் போர்சிபுல்ஸ் (forcipules) எனப்படும் விஷத்தைக் கொண்ட உறுப்புகளைப் பயன்படுத்துகின்றன.




# முக்கிய தினங்கள்

## காவலர் நினைவு தினம் 2026 - அக்டோபர் 21

- பணியின் போது தங்கள் இன்னுயிரை நீத்த காவலர்களை கௌரவிப்பதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- 1959 ஆம் ஆண்டு அக்டோபர் 21 அன்று லடாக்கில் உள்ள ஹாட் ஸ்பிரிங்ஸ் பகுதியில் சீனப் படைகள் நடத்திய தாக்குதலில் 10 இந்தியக் காவலர்கள் கொல்லப்பட்டனர்.
- அதிக உயரமுள்ள பகுதியில் இந்தியா-சீன எல்லையில் ரோந்து சென்றபோது இச்சம்பவம் நிகழ்ந்தது.
- 1960 ஆம் ஆண்டு ஜனவரியில் நடைபெற்ற காவல்துறை இயக்குநர்கள் மற்றும் காவல் துறை தலைவர்களின் வருடாந்திர மாநாட்டில் அக்டோபர் 21 ஆம் தேதியை காவலர்

நினைவு தினமாகக் கடைபிடிக்க முடிவு செய்யப்பட்டது.

- இந்நாள் காவலர் ஷஹீத் திவாஸ் அல்லது காவலர் தியாகிகள் தினம் என்றும் அழைக்கப்படுகிறது.




## உலகளாவிய அயோடின் குறைபாட்டு நோய்கள் தடுப்பு தினம் 2026 - அக்டோபர் 21




- அயோடின் குறைபாடு மற்றும் ஆரோக்கியத்தில் அதன் விளைவுகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதை இந்த நாள் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அயோடின் என்பது தைராய்டு ஹார்மோன்களை உற்பத்தி செய்யத் தேவையான ஒரு அத்தியாவசிய நுண்ணூட்டச்சத்தாகும்; இது வளர்ச்சி, வளர்சிதை மாற்றம் மற்றும் மூளை வளர்ச்சிக்குத் துணைபுரிகிறது.
- அயோடின் குறைபாட்டு நோய்களில் (IDD) முன்கழுத்துக் கழலை நோய், ஹைப்போதைராய்டிசம் மற்றும் குழந்தைகளில் ஏற்படும் மூளை வளர்ச்சிப் பிரச்சனைகள் ஆகியவை அடங்கும்.
- இந்தியாவின் தேசிய அயோடின் குறைபாட்டு நோய்கள் கட்டுப்பாட்டுத் திட்டம் (NIDDCP) அயோடின் கலந்த உப்பு, சுகாதாரக் கல்வி மற்றும் அயோடின் குறைபாட்டைக்

கண்காணிப்பதை ஊக்குவிக்கிறது.

- கர்ப்ப காலத்தில் ஏற்படும் அயோடின் குறைபாடு வளரும் குழந்தையின் மூளை மற்றும் நரம்பு மண்டலத்தை பாதிக்கலாம்.

# இதரச் செய்திகள்

## 70 ஆவது தம்மசக்ர பிரவர்தன் தினம் 2026

- 70 ஆவது தம்மசக்ர பிரவர்தன் தினமானது மகாராஷ்டிராவின் நாக்பூரில் உள்ள தீக்ஷாபூமியில் 2026 ஆம் ஆண்டு அக்டோபர் 20 அன்று கடைபிடிக்கப்பட்டது.
- 1956 ஆம் ஆண்டு அக்டோபர் 14 அசோக விஜயதசமி அன்று டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் தனது ஆதரவாளர்களுடன் நாக்பூரில் உள்ள தீக்ஷாபூமியில் பௌத்த மதத்தை தழுவினார்.
- இந்நிகழ்வு பௌத்த மதத்திற்கு பெருமளவில் மதம் மாறிய ஒரு வரலாற்று நிகழ்வாக நினைவுகூரப்படுகிறது மற்றும் இது ஆண்டுதோறும் தம்மசக்ர பிரவர்தன் தினமாக அனுசரிக்கப்படுகிறது.
- மகாராஷ்டிராவின் நாக்பூரில் அமைந்துள்ள தீக்ஷாபூமி என்பது அம்பேத்கர் பௌத்த மதத்திற்கு மாறியதுடன் தொடர்புடைய நினைவு இடமாகும்.
- இந்நிகழ்வு சமத்துவம், சுதந்திரம், சகோதரத்துவம் மற்றும் மனித கண்ணியம் போன்ற பௌத்த கொள்கைகளுடன் தொடர்புடையதாகும்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★